செ.வெ.எண் : 28 நாள் : 16.02.2024

## பத்திரிக்கைச் செய்தி

## சமூகப் பாதுகாப்புத்துறை குழந்தை நலக்குழுவிற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனமத்திற்கு விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு

---

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் விதிமுறைகளின் படி அமைக்கப்பட்டுள்ள குழந்தை நலக்குழுக்களுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குழந்தை நலக்குழுவிற் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல.

விண்ணப்பதாரர்கள் குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூக பணி அல்லது சமூகவியல் அல்லது மனித ஆரோக்கியம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள் தொடர்பான உடல்நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவர் அல்லது குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூகப்பணி அல்லது சமூகவியல் அல்லது மனித ஆரோக்கியம் அல்லது கல்வி அல்லது மனித மேம்பாடு அல்லது மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்ற தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் நியமனம் செய்யப்படும்போது 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதை பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு நபர் குழந்தை நலக்குழு தலைவர் அல்லது உறுப்பினராக நியமனம் செய்த தேதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு பதவி வகிப்பார்

இதற்கான விண்ணப்பப்படிவத்தை அந்தந்த மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் (செய்தி வெளியீடு நாளிலிருந்து 15 நாட்கள் வரை) கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர்,
சமூகப் பாதுகாப்புத்துறை,
எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 010.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு**: செய்தி மக்கள் தொடர்புத்துறை, தென்காசி.

**Press Release**

**Appointment of Chairperson and Members of the Child Welfare Committee**

Applications are invited by the Department of Social Defence from the eligible candidates who possesses the following qualifications for appointment of Chairperson and Members in Child Welfare Committees constituted under the provisions of Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015. Chairperson and Members for Child Welfare Committee will be appointed by Government on a honorarium basis and the position is not a Government employment.

The applicants should have a degree in Child psychology or psychiatry or law or social work or sociology or human health or education or human development or special education for differently abled children and has been actively involved in health, education or welfare activities pertaining to children for seven years or is a practicing professional with a degree in child psychology or psychiatry or law or social work or sociology or human health or education or human development or special education for differently abled children. The age of the applicant should not be less than 35 years and not completed 65 years at the time of appointment. A person shall be eligible for appointment as a Chairperson or Member for a period of three years from the date of on which he enters upon his office.

The application format and eligibility criteria may be obtained from the District Child Protection Unit of the District concerned and filled in applications should be sent to the following address on or before 15 days from the date of press release.

The Director,

Directorate of Social Defence,

No.300, Purasaiwalkam High Road,

Chennai – 600 010.

The filled in applications should reach the above office within the stipulated date. The appointment will be purely based on merit and experience. The decision of the Government will be final in this regard.

**வெளியீடு**: செய்தி மக்கள் தொடர்புத்துறை, தென்காசி.